சைவ பரிபாலன சபை வெளியீடு:
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவுபெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40.

புத்- ௯0 ] யாழ்ப்பாணம்- காலயுக்தி ஞு பங்குனி மீ வெள்ளிக்கிழமை (16-3-1979) [ இல- ௪௨

## பயன் அளிக்கும் இலக்கியப் படைப்புக்களே நிலைபெறுவன

### பேராசிரியர் கலாநிதி கைலாசநாதக் குருக்களின் அநுபவப் பேறு

மாவை முத்தமிழ் மன்ற நிலையத்தில் அகில இலங்கைச் சைவ மகாசபையின் விசேட நிர்வாகக் கூட்டம் சென்ற சனிக்கிழமை திரு நம. சிவப்பிரகாசம் தலைமையிற் கூடிய அமையம், சபையார் எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகிய 'சைவ சமயக் களஞ்சிய' நூல் ஆக்கத்தைப் பற்றிக் கருத்துரைக்கும் பொழுது யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிக பண்பாட்டுத் துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் உத்தேச நூலின் இன்றியமையாமையை எடுத்துக்கூறி இத்தகைய முயற்சி இலங்கையில் முதலாவதாக இப்பொழுதே நடைபெறச் சூழ்நிலை உண்டாயிருக்கின்றதென்றும் இவ்வெளியீடு பெரும் பயன் அளிக்கும் தகைமையை நோக்கமாகக் கொண்டிருக்கின்றமையால் நிலைபெறத் தக்கது என்றும் சொல்லினர்.

ஆலய அலுவல்களுக்கன்றி வேத சிவாகம வித்துவ விரிவிற் கருத்துடையவராய் இத்தகைய முயற்சிகளுக்கு ஆசியும் ஆதரவும் எப்பொழுதும் வழங்கும் மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் சமய அறிவு வளர்ச்சிக்குரிய எல்லாக் கருமங்களிலும் தாம் வேண்டிய உதவி புரிவார் என்றும் சண்முகப்பெருமான் கிருபையில் இந் நன்முயற்சி இனிது நிறைவுறும் என்றும் ஆசி வழங்கினர்.

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் இந்திரபாலா தமது குறிப்புரையில் வரலாற்றாராய்ச்சியும் சமய தத்துவ ஆராய்ச்சியும் ஒன்றோடொன்று இணைந்துள்ளனவென்றும் சைவ மகாசபை எடுக்கும் முயற்சி பெரும் பொறுப்பு வாய்ந்ததென்றும் அவ்வகையில் முன்னேற்றம் காண்பதற்கு ஆராய்ச்சி வல்லுநர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்றும் களஞ்சியத்தின் பொருள் அடக்கம் தமிழ் இலக்கிய இலக்கணச் செறிவின் பிரதிபிம்பமாய் சமயத் தத்துவத்தின் சாரமாய் வரலாற்றின் வளர்ச்சியை விளக்குவதாய் அமைய வைப்பது அதில் ஈடுபடுவோர்களின் பெரும் பொறுப்பாகும் என்றனர்

சபைத்தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் முன்னுரையாகச் சபை எடுக்கும் முயற்சி சத்து வாய்ந்ததாய் சமயிகளுக்குப் பயனுடைத்தாய் நிறைவு பெற சமயம் மொழி வரலாறு ஆகிய துறைகளில் முன்னணியில் நிற்கும் மூதறிஞர்களின் உழைப்புபகாரம் வேண்டப்படுகின்றதென்றும் மாவை முருகன் திருவருளாக எழுந்த இந்நோக்கம் நிறைவுறத் திரிகரண சுத்தியுடன் உழைப்போமாக என்றும் ஊக்குவித்தனர்.

சபைச் செயலாளர் விரிவுரையாளர் நா. சுப்பிரமணியம் அவர்கள் திட்டத்தைச் சமர்ப்பித்து இயக்கக் குழு அமைப்பை விளக்கப்படுத்தினர்.

விரிவுரையாளர் கோ. பாலகிருஷ்ணன் அவர்கள் களஞ்சிய அமைப்பு, தயாரிக்கக் கால எல்லை வேறு அலுவலகப் பொறுப்புகள் முதலியனவற்றை விரித்துக் கூறினர்.

புலவர் பார்வதிநாதசிவம் களஞ்சிய முயற்சியின் அருமையைப்பற்றிக் குறிப்பிட்டனர்.

அதிபர் இராஜ. சண்முகரத்தினம் நன்றியுரை ஆற்றினர்.

கதிர்காம தரிசனத்துக்கு வரும் அடியார்களுக்குப்

## புனித உணவு வசதி செய்வோம்

கதிர்காமம் திருவிழாக் காலங்களிலும் ஏனைய நாட்களிலும் சுவாமி தரிசனத்துக்கு வரும் அடியார்கள் சைவ முறைப்படி உணவு பெறச் சிரமப்படுவதை உணர்ந்து அடியார்களுக்கு உணவு வசதி செய்து கொடுக்கக் கதிர்காமம் ஸ்ரீதெய்வானையம்மன்தேவஸ்தான ஆலய நிர்வாகஸ்தர் ஒழுங்கு செய்திருப்பதாக அறிவிக்கின்றனர். இந்த நன்முயற்சிக்கான நன்கொடைப் பணமோ பொருட்களோ கொடுக்க விரும்பும் அடியார்கள் அவ்வாறு கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெறும்படியும் நிர்வாகஸ்தர் வேண்டுகின்றனர்.

## இந்து சமயப் பணிகளுக்கு கலாசாரத் திணைக்கள நிதியுதவி

வழமைபோல இவ்வாண்டும் கலாசாரத் திணைக்களம் இந்துசமயப் பணிகள் புரியும் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்ய இருக்கிறது. நிதியுதவி செய்யும்போது குருபூசை, சமயப் பிரசங்கங்கள் கூட்டுப் பிரார்த்தனைகள் முதலிய பணிகள் பொதுவாகவும், பாடசாலை நேரத்துக்குப் புறம்பாகச் சமய பாட வகுப்பு நடத்துதல். திருமுறைகளைப் பண்ணோடு ஓதப் பயிற்றுவித்தல் சமயப் பிரசுரங்களை வெளியிட்டு இலவசமாகவோ குறைந்த விலையிலோ விநியோகித்தல், சைவ சமய தீட்சை செய்வித்தல போன்ற பணிகள் விசேடமாகவும் கவனிக்கப்படும்.

அத்துடன் இந்துசமய அறிவை வளர்க்க உதவும் நூல்கள் வெளியிடுவோருக்கு உதவவும், பண்ணிசைப் போட்டிகள், திருமுறை விழாக்கள், சித்தாந்த மாநாடுகள் நடாத்த ஊக்குவிக்கவும் இந்து சமய விவகார ஆலோசனைச் சபை இவ் வருடம் நடவடிக்கை எடுக்கும்.

நிதியுதவி பெற விரும்புவோர் 135, தர்மபால மாவத்தை, கொழும்பு-7. என்ற முகவரியிலுள்ள கலாசார அலுவலகள் அதிபர் காரியாலயத்திலிருந்து பெறத்தக்க விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் விண்ணப்பங்கள் 30-4-79-க்கு முன் கிடைக்கத் தக்கதாக அனுப்பப்படல் வேண்டுமெனவும் இந்து சமய விவகார ஆலோசனைச் சபைச் செயலாளர்தெரிவிக்கின்றார்.

## ஆதரவற்றவர்களுக்கு அன்னதாதாக்களாகப்பணி

### ஆற்றும் பேற்றினைப் பெறுதல் அரிது

ஆண்டுதோறும் கைதடியிலே சைவச் சிறுவர் இல்லம் சார்பாக நிகழும் 'கொடி' நாள் சென்ற சனிக்கிழமை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நிகழ்ந்தது.

'தானம் ஒரு சமயப் பண்பாடு அது தவத்துக்கு வழி செய்வது. அவ்வழியில் நின்று கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தை நிறுவியவர்களும் உதவியவர்களும் அதனை வளர்ப்பவர்களும் உண்மையான தவமாற்றுகின்றார்கள் என்று பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அநாதர் இல்ல அலுவல்களை விதந்து பேசிக் கொடிநாள் வைபவத்தைத் தொடக்கி வைத்தனர்.

இந்துசாதன ஆசிரியர் திரு நம. சிவப்பிரகாசம் அவர்கள் 'அநாதர்கள் உதவியைக் கேட்டுப் பெற வேண்டியவர்கள் அல்லர், அவர்களுக்கு ஏனையோர் தாமாகவே முன் வந்து ஈவதே நல்லறம் என்றும் வள்ளுவர் சிந்தனையாகிய "நல்லாறெனினும் கொளல் தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்பதன் அடிப்படைக் கருத்தினை உணர்பவர்கள் கைதடி இல்லத்துக்கு வழங்கும் கை உடையவர்களாகும் பேறுள்ளவர்கள் என்றும் கூறினர். வள்ளுவர் எடுத்தாண்ட 'கொளல்' என்ற சொல் வலிந்து கேட்டுப் பெறுவதாகிய இரத்தலைக் குறிக்கின்றதாகையால் அநாதர்களுக்காக வேண்டுகோளை எதிர்பார்க்காது உபகாரஞ் செய்வதே தானம் என்னும் பெருநிலையென்று மேலும் சொல்லினர்.

மன்னார் அரசாங்க அதிபர், கோப்பாய்க் கிறித்தவக் கல்லூரி அதிபர் சி. சிவகேசன் உட்படப் பலர் ஆசியுரை வழங்கினர். சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. முருகவேள் கைதடி அநாதர் இல்லம் உலகத் தருமத் தாபனங்களில் ஒன்றாய் மதிப்பும் பெற்றிருக்கின்றதென்றனர்.

## 'சாதனை' உலகம் தரும் வேதனை

இப்பொழுது இந் நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஒரு தொற்றுநோய் 'சாதனை' இந்தச் சொல்லை நாம் நன்கறிவோம். ஒரே ஒருவகையிலே - சாதனையும் போதனையும் - என்றதுதான் பொதுவாக மக்கள் அறிந்த சாதனை. சொல்லுவதைச் செய்துகாட்டுகின்றாரில்லையே என்று பலரும் சொல்லக் கேட்கின்றோமல்லவா?

அரசியலில் எத்தனையோ போதனைகள்! ஆனாற் போதிப்பவர் அவற்றைச் சாதிப்பதில்லை. சமுகவியலிலும் அவ்வாறே. குடிக்காதீர் என்று சொல்லுபவர்கள் குடிக்கடிமையாயிருப்பார்கள். புலால் உண்ணாதீர் என்று புகட்டுபவர்கள் அவ்வாறின்றி ஊன் உண்பவர்கள் ஆக இருப்பதுவும் உண்டு. ஊருக்கு உபதேசம் அல்லாமல் தனக்கல்ல என்று சொன்னார் ஒரு போதகர்.

இப்படியாகச் சாதனை செய்யப்பட வேண்டிய பல கருமங்கள் இருக்க ஒன்றுக்கும் உதவாத ஒரு வினையாட்டிற் சாதனை செய்வதென்றால் இதில் மனம்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுக்திஞூ — பங்குனிமீ
(16-3 79) வெள்ளிக்கிழமை

## சற்சமயத்தில் நிற்கும் நெறி

"நமது சற்சமயமாகிய சைவ சமயம் வரவரக் குன்றுகிறது" என்று நாவலர் ஐயா சொல்லியதை மீண்டும் பலமுறை நாம் பாடமாகச் சொல்ல வேண்டிய காலத்தில் வாழ்கின்றோம். அவர்கள் அக்கூற்றை எவ்வாறு நிரூபித்தார் என்று பார்ப்பது நன்று.

"நம்முடைய சைவசமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்கு கற்பித்தலும் யாவரும் எளிதில அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப்போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகிறது."

கல்வி இக்காலத்தில் எல்லோருக்கும் உண்டு என்று நாம் நினைக்கின்றோம், பள்ளிக்கூடம், கலாசாலை, கல்லூரி. வளாகம், பல்கலைக்கழகம் என்ற அரச ஒழுங்கில் உள்ளவை ஒரு புறம். வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு, தனியார் கல்வி புகட்டும் நிலையங்கள் பன்னூற்றுக்கும் மேலாக மறுபுறம், இப்படியிருந்தும் சமயம் குன்றுவதென்றால் இக்கல்விமுறை செல்லாதென்பதே.

சைவசமயிகளைப் பொறுத்தவரையில் எடுத்துப் பேசினால் அவர்களுக்குரிய கல்வி சைவ நூல்களின் அடிப்படையில் இருத்தல் அவசியமாகின்றது. இத்தகைய கல்வியைப் புகட்டுகின்றவர்கள் சிலரே அவர்களும் சமயாசாரங்களைப் போதித்தல் மிகவும் குறைவே.

எளிதில் அறிந்து உய்தல் என்ற நெறி மாணாக்கர்களுக்குப் படியவைப்பது ஆசிரியர்கள், பெற்றோர் இவர்களின கடமையாகும்,

இன்று கல்விக் கழகங்களிற பாடத்துக் குரியனவாய் அமைந்துள்ள புத்தகங்கள் பலவேறு நிறத்தின, ஒன்றுக் கொன்று முரணான கருத்துக்கள் உடையன. சைவ நெறி அறிய வேண்டியவர்களுக்கு ஒவ்வாதன.

நாவலர் அவர்கள் காலத்திலேயே பாடமுறையை நன்கு பின்பற்றிப் பாலபாடங்கள் இயற்றினர். இந்நெறியைப் பின்தொடர்ந்தே சைவப் பெரியாரும் போதம் வரிசையில் மூன்று புத்தகங்களை வெளியிட்டனர். இவற்றைத் தழுவியே சைவபரிபாலன சபையார் பாடபுத்தகங்களை ஆக்கி உதவினர். அத்தகைய புத்தகங்களைக் கற்பிக்கத் தக்க ஆசிரியர்களும் இருந்தனர், மாணாக்கர்களும் எளிதில் அறிந்தனர்,

இந்தமுறை மீண்டும் இயங்கவேண்டும், ஆசாரங்களைப் போதிக்க வேண்டிய இடம் பாடசாலை. படிப்படியாக மாணாக்கர்கள் அறிவும் அறிந்தவற்றில் ஆர்வமும் பெறத்தக்கதாயிருந்தால் கல்வி பயனுடைத்தாகும்.

பள்ளிக்கூட நிகழ்ச்சிகள் தொடங்கும் பொழுதும் முடிவடையும் வேளையிலும திருமுறை ஓதுதல். மாணாக்கர்களின் ஒழுக்க நெறிக்கு நல்வழியை வகுப்பது என்பதை எடுத்துச் சொல்லவும வேண்டுமோ

அறிவு வளர அன்பு செறியும்; பண்புண்டாகும். அஃதின்றி மக்கட் பண்பு சற்றும் இல்லை இந்த மாநிலத்திலே என்று துக்கப்படவேண்டி ஏன் வந்தது. ஏற்ற கல்வி ஆற்றுப்படாமையாலன்றோ

பண்பு பெருக்காத கல்வி ஒன்றுமே அறநெறி ஆய்ந்துரைத்த அப்பொய்யில்புலவர் கூற்றில் அத்தகையோர் மரம்போல்வர்.

"அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பேறில்லாதவர்",

ஏட்டோலை வாசிக்கமாட்டாது நின்றாலும் மரம் என்று புலவர்கள் கூறிப் போந்தனர். ஓலை வாசித்தும் சீல நெறியில்லாராகில் நிச்சயம் இவர்கள் மரம் தானே.

இந் நாட்டில் மரங்கள் வேறு மனிதர்கள் வேறாய் விளங்கச் சற்சமயத்தில் நிற்கும் நெறிபுகட்டும் கல்வியைக் கற்பிக்க வேண்டியது யாவரினதும் பெருங் கடமையாகும்.

கற்றும் பயனின்றும்
கைதொழுதே ஈசனடி
பற்றும் நினைவுதரும்
பண்பிலையேல் — சற்குரு
நாதராம் நாவலரே
நன்றுரைத்தார் சைவநெறிப்
போதவுரை போற்றுமென்றப்
போது.

---

## திருவிழா

### நால்வர் திருவீதி ஊர்வலம்

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் கோயில் அலங்காரத் திருவிழா வருகிற (20-3-79) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். பத்துத் தினங்களுக்கு நிகழும் திருவிழாவில் சைவ சமயச் சொற்பொழிவுகளை நடாத்த யாழ் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது. திருவூஞ்சற்றிருவிழாபூர்த்தித்திருவிழாவாகும்

அன்றையதினம் நால்வர் திருவீதி ஊர்வலம் ஆங்கு நிகழும்.

---

# வண்ணை வைத்தீஸ்வரர் மா விழா

## கொடியேற்ற நிகழ்ச்சி இன்று கூடுகின்றது

என்னும் பொழுதெல்லாம் இன்னருள் பாலித்து
நண்ணும் அடியவர்க்கு நற்கதிசெய் — வண்ணைநகர்
வைத்திய வரன்வடி வாம்பிறைபொற் றூள்சிவன் உள்
வைத்தால் வருமே வரம்.

இத்தலத்தில் யாவர்க்கும் இன்னமுதாய்ச் சொற்பெருக்கி
உத்தமமாம் சைவநெறி ஊக்குவித்தார் — வித்தகனார்
ஆறுமுக நாவலர் அக்காலம் போலின்றும்
வீறுகொள வைப்போம் விழைந்து.

நல்லைநகர் வண்ணைநகர் எல்லைகட்குள் சைவத் தொண்டு நிலையம் அமைத்து சமயப் பணி செய்த நாவலர் நற்றவனாரை நினைவூட்டும் திருத்தலங்கள் பல உள. வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், நல்லைக் கந்தன் கோயில், நகுலேஸ்வரம், திருக்கேதீச்சரம், சிதம்பரம் என்பன முக்கியமானவை. இவற்றுள் நாவலர் அவர்கள் நாவாரச் சொற்றொண்டாற்றிய தலம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் என்பதை யாவரும் அறிவர்.

நாவலரின் வேண்டுகோளை மேற்கொண்டு அக்காலம் தொடக்கம் அடியார்கள் அயரா துழைத்தமையாற் பாடல்பெற்ற திருக்கேதீச்சரம் மறுபடியும் வான்புகழுடன் விளங்குகின்றது அவ்வாறே நகுலகிரியில் ஈசன் கோயிலும் நலவண்ணமாய்த் திகழுகின்றது. நல்லைக் கந்தன் கோயில் அலகும் பகலும் வனப்பில் வளர்ந்த வண்ணமிருக்கின்றது,

ஆனால் வண்ணை ஈசன் கோயில் இவ்வண்ணம் எழாதிருப்பதென்னையோ ?

நாவலரின் நற்றாள்கள் படிந்த திருத்தலமுமா பொலிவிற் குறைவுறறிருப்பது ?

பொன்னும் பொருளும் மன்னிய பொலிவு வளம்படைத்த வைத்தீஸ்வரன் ஆலயம் என்ன எழிலாய் இருக்க வேண்டும் ?

நாவலரை நினைவு கூரும் அன்பர்கள் இதையும் சற்று எண்ணக்கூடாதா ?

---

# கச்சியப்பர் விழாவிற் கருத்துரை

"கந்தபுராணம் எல்லாவித இன்னலையும் போக்கும் அருமருந்து, அதனை முறைப்படி பயன்பற்றின் சிவஞானம் பிரகாசிக்கும், இம்மைப் பயனும் மறுமைப் பயனும் ஏற்படும் கந்தபுராணத்தின் ஏழாம் பகுதியாகிய உபதேசகாண்டத்தை நாவலர் பெருமான் உச்சிமேற் கொண்டனர். ஆனல் இன்று அது மறைக்கப்பட்டுள்ளது. அதனை எல்லோரும் அறியச் செய்வது நம் கடன்"

இவ்வாறு கந்தபுராண பிரசார சபை யாழ்ப்பாணம் கொட்டடி பாலஞான வைரவ சுவாமி கோயிலில் கொண்டாடிய கச்சியப்ப சிவாசாரியர் — உபதேசகாண்ட அறிமுக விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றிய சைவப் புரவலர் சிவமணி வே. கந்தசாமி கூறினார்

வைத்திய கலாநிதி சித்தாந்த பண்டிதர் க. கனகரத்தினம், புகைபிரதநிலைய அதிபர் திரு. மு. தியாகராசா, சைவத் தொண்டர் திரு. வ. கார்த்திகேசு ஆசிரியர், ஆசிரியர் திரு செ. சிவரத்தினம், செல்வி மனோகரி கணேசசுந்தரம, சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை ஆகியோர் கந்த புராணத்தினதும் கச்சியப்ப சிவாசாரியரினதும் அளப்பெருந் பெருமையை எடுத்துரைத்தனர்.

யாழ். நா. சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரது பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது. கவிஞர் கா. சுந்தரம்பிள்ளையின கந்தபுராணக் கவிதாஞ்சலி, மூன்றாள் அதிபர் திரு க. தருமலிங்கம குழுவினரின் கந்தபுராண படனம், உபதேச காண்ட அறிமுகம் என்பனவும் இடம்பெற்றன, விசேட பூசை, பொங்கல், பிரசாதம் வழங்கல் ஆகியனவும் இடம்பெற்றன. ——

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் இம்மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல் ஒப்ப நிற்றல் நடுவு நிலைமை எனப்படும்.

நாவலர் நன்மொழி

---

## சம்பந்தப் பெருமான் பாடிய மாசி மகம்

பெருமை பெறு நட்சத்திரங்களில் ஒன்று மாசி மகம் — தைப்பூசம் — மார்கழித் திருவாதிரை — கார்த்திகைக் கார்த்திகை, ஆவணித் திருவோணம் — (ஐப்பசி ஓணம்) ஆடிப்பூரம ஆனி உத்திரம், வைகாசி விசாகம் சித்திரைச் சித்திரை, பங்குனி உத்திரம் போல.

திருச்சிற்றம்பலம்.

'மடலார்ந்த தெங்கின்
மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான்
கபாலீச்சர மமர்ந்தான்
அடலானே றூரும் அடிகள்
அடி பரவி
நடமாடல் காணாதே
போதியோ பூம்பாவாய்".
திருச்சிற்றம்பலம்

திருமயிலாப்பூர்ப் பதிகம் — 2-ம் திருமுறை.

திருஞான சம்பந்தப் பெருமானுக்கென நிச்சயிக்கப்பெற்ற பூம்பாவை அரவந் தீண்டி இறக்க மறுபடி உயிர்பெற்றுப் பூம்பாவை எழப் பாடப்பெற்றது இப்பதிகம்.

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

---

## 'சாதனை' உலகம்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வேதனைப்படாதிருக்க முடியுமா !

பழைய காலத்திலே இரு நண்பர்கள் கள் மதுபோதையில இருந்தபொழுது யார் அதிகம் குடிப்பது என்று சபதமிட்டபடி மது அருந்திக்கொண்டிருந்தனர் மது என்றால் நெருப்புத்தானே. அக்கினிக்கு மேல் அக்கினியாகக் கொதித்தெழும்வரைக்கும் குடித்துக் கொண்டிருந்தவர்கள் உணர்ச்சிகெட்ட நிலையில் ஒருவரை ஒருவர் பொருதி இருவரும் உயிர் துறந்தனர் என்பது கதை.

இவ்வாறே ஆகக் கூடுதலாக உணவு அருந்துவதில் ஒரு சாதனை செய்ய ஒருவர் முற்பட்டால் என்னாகும் அவர் உடம்பு?

உலகத்தை உள்ளங்கால் மண்மேற் படிய நடந்து காட்டுவேன் என்று ஒருவர் சாதனை செய்தால் அதில் ஒரு பொருத்தம் இருக்கின்றது

ஒற்றைக் காலில் நிற்பதில ஒரு சாதனை என்றால் அதில என்ன பயன் ?

நடனம் என்றால் நடராச நடனத்தையே நாம் எண்ணுவோம.

உடம்பை அசைத்து அங்கும் இங்கும் சுழல்வதை நடம் பயிலுதல் என்று சொல்வதானால் நன்று நம் உலகம் சென்றுகொண்டிருக்கும் நடை.

நால்வர் கூடினால் மாநாடு, இரண்டு நாட்டவர் ஒருங்கு சேர்ந்துவிட்டால் அனைத்துலக மாநாடு என்றிந்த வகையில் வருவனைகள் வளரும் காலத்தில் சாதனைக்குரிய தல்லர்ததிற் சாதனை செய்தலும் ஒரு சாதனையேயாகும். அதன பயன் மன வேதனையே,

உ

## நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் திருமும்மணி

[ பண்டிதர் சே. சிவப்பிரகாசம் ]

வெண்பா

இருவார் பிரணவத்துச் செய்ய பொருளே!
தருவா யுனதிருந் தாள்கள் — குருவே!
மயிலுகந்த மாமுருகன் அண்ணாவே! எங்கள்!
வெயிலுகந்த பிள்ளையா ரே.

கட்டளைக் கலித்துறை

பிள்ளையா ரேயென்று போற்றிப் பிரியமாய் முனைந்துழுந்தே
கள்ளமில் லன்பாற் கசிந்து கசிந்து மனமுருக
கொள்ளுபே ரின்ப அருள்பல ஈயுங் குருமணியே!
வெள்ளலா காவெயி லேயுகந் துள்ள விநாயகனே!

ஆசிரிய விருத்தம்

எம்மருங்கும் மணியோசை எழுந்து விம்ம
ஏந்துநல் அடியார்கள் இதயத் தன்பு
செம்மையுடன் வளர்ந்தோங்கி வழிபா டாற்றச்
சிறந்ததிருக் கோயிலுளே அமருந் தேவே!
அம்மையிம்மை நலமருளும் அருளின் மிக்க
ஆதிப்பிர ணவப்பொருளே! போற்றி! போற்றி!
வெம்பிணிநோய் தீர்த்தருளவாய் போற்றி! போற்றி!
வெயிலுகந்த விநாயகரே! போற்றி! போற்றி!.

## சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் நினைவு

துன்மதி ஆண்டு மாசித் திங்கள் தசமித்திதியிற் சிவபதமடைந்த சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் அவர்களை அத்திதியில் நினைவுறுதல் தமிழ் அன்பர்கள் கடமையாகும்.

பிரமாதீச ஆண்டு தைத்திங்கள் பதினெட்டாம் நாளிலே தோன்றிய இவர் கல்விக் களஞ்சியமாக விளங்கியவர்.

பல நூல்களுக்கு அரிய உரை வெளியிட்டதுடன் செய்யுள் வடிவத்தில் நூல்களும் வரலாறு வகையாகத் தமிழ்ப் புலவர் சரித்திரமும் வேறு கட்டுரைகளும் கண்டனங்களும் புலவர் அவர்களின் அறிவுப் பெருமையை எடுத்துக் காட்டுவன

### புலவரின் பாக்களின் நயம்

பூவின் மேம்படு வன்மிக முனிவரன் புகன்ற
காவி யந்தனைச் சுருக்கிய கட்டுரை இராமன்
மேவு தந்தநற் றமிழினிற் கவிதையாய் யாக்கத்
தேவ னைங்கரன் கரிமுகன் சேவடி பணிவாம்.

### நாவலரை நயந்தது

ஐந்திலக்கின் ஆவதென்ன ஆணவத்தின் பேரென்ன
முத்து நடுவின் மொழியென்ன — இந்நிரந்து
மாறுகொண்டோன் பேரான வாக்கின் மிகவல்ல
ஆறுமுக நாவலரே யாம்.

### சைவமத தமிழ்மொழிப்பற்று

வாழி அந்தணர் மன்னவர் பின்னுளோர் மறைகள்
வாழி ஆகமம் [illegible] வைதிக சைவம்
வாழி செந்தமிழ் இலக்கிய இலக்கண வரம்பு
வாழி இராமவல் பொருங்கதை மாநிலத் தினிதே,

## சம்பந்தப்பெரு

2-ம் பக்கத்து வளர்ச்சி

மயில் வடிவாய் உமையன்னை இறைவனை வேண்டி வரமிருந்த ஊர் ஆதலின் திருமயிலாப்பூர் எனப் பெயர் பெற்றது இத்தலம்,

இங்கே குறிப்பிடப்பட்ட மாசிக் கடலாட்டு மாசியில் வரும் மகநட்சத்திரத்தன்று சமுத்திர தீர்த்தம் ஆடுவதைக் குறிக்கின்றது.

x x x

### பங்குனித் திங்களிற் பக்திப் பெருக்கம்

மாசி மகத்தன்று பூசனை ஈசனுக்குச் செய்யும் பெருமையை அடுத்து வராநிற்கும் பங்குனி உத்திரத்தின் நினைவு எழுந்துவிடும்.

உத்திர நட்சத்திரத்துக்குப் பங்குனி என்றும் பெயர். அத்திங்களில் வரும் உத்திரத்தின் உத்தமத்தைக் குறித்துப் போலும்

திருஞான சம்பந்தப் பெருமானும் இசை சிறப்பிக்கக் கூறுமுகத்தான்

திருச்சிற்றம்பலம்,
...யணிவிழா வீதி மடநல்லார்
மாமயிலைக்
கலிவிழாக் கண்டான்
கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடலசெய்
பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்,
திருச்சிற்றம்பலம்

எனத் திருவாய்மலர்ந்தமை காண்க.

வீதியின் சிறப்பு மலிந்து பொலிந்து நிகழும் விழாக [illegible]

ஆலயங்களில் அடியார் பக்தப் பெருக்கத்துக்குரிய அலங்கார விழாக்களின சிறப்பு பொலிவது அருள் நிகழ்ச்சியாகும்.

திக்குகள்தோறும் இவ்வாறு உருத்திரபலி விழாவின் ஒலி சிறப்புடைத் தென்பதைப் பூம்பாவைக் குணர்த்தியவாறு போன்று வவுனியா கோணா திருக்கடைக் காப்புத் திகழ்கின்றது.

அறுபத்துமூவர்திருவிழா இத்திருப்பதியிற் பங்குனி மாதத்திலே நிகழ்வது குறிப்பிடத் தக்கது.

— — —

## முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் - 'இந்துசாதன'த்தில்

## மட்டுவில் சிவன்கோயில் வரலாறு

கைலாச நாதராகிய மூலஸ்தான மகாலிங்கத்தையும் இப்படியே யாரோ பிராமணர் துரிதமாக எடுத்துக்கொண்டுபோய் நல்லூருக்கு வடகிழக்கே ஒன்பது மைல் தூரத்தில் உள்ள ''கல்வம்'' என்னும் திடரிலுள்ள ஒரு துரவினுள்ளிட்டு வைக்க அவ் இலிங்கம் சில நூற்றுக்கணக்கான வருடங்களாக அத் துரவினுள்ளே இருக்க, பின்னர் பரித்தானிய காலத்திலே பெருமான் அங்குள்ள சிவபக்தர் ஒருவருக்குத் தாம் அங்கு கரந்திருக்கும் திருவிளையாட்டைச் சொப்பனத்தாற் சொல்லி அருள அச் சிவபக்தர் அவ்விடத்தில் திருக்கோயில் அமைப்பித்து அச் சிவலிங்கப் பெருமானையும் பரிவார மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்வித்து அக் கோவிலின் நித்திய நைமித்தியங்களும் நடைபெறச் செய்தனர். அந்தத் தலமே தற்போது மட்டுவில் கல்வத்து சிவன் கோவில் என வழங்கப்படுவதாகும். மன்மதனால் திருக்கேதாரத்திற் பூசிக்கப்பட்டு நல்லூரில் எழுந்தருளி கைலாயநாதர் என்னும் திருநாமத்தாற் போற்றப்பட்டு வந்த பெருமான் பிற்காலத்தில் மட்டுவிலில் சந்திர மௌலீசர் எனும் திருநாமத்தோடு பூசித்து வழிபடப் பெறுவாராயினர். அங்கு எழுந்தருளியிருக்கும் அம்மை திருநாமம் சாந்தநாயகியாகும்.

இக் கைலாய நாத சுவாமி கோவிலைப் பறங்கியர் இடிக்கப் போகிறார்கள் என்பதனை சில நாட்களுக்கு முன்னே அறிந்த கோயிலதிகாரிகளும் பிராமணர்களும் அயலோர்களும் அங்கிருந்த மூர்த்திகளை முந்தியே எடுத்துக்கொண்டுபோய்க் கிணறுகளிலும் குளங்களிலும் இட்டு மறைத்து வைத்திருந்தனராம்.

'இந்துசாதனம்' — புத்தகம் 57, இலக்கம் 23
பார்த்திப வருஷம் ஆனி மாதம் 12-ஆம் நாள்
(25-5-1945)


## AUCTION SALE

I shall sell by Public Auction the unredeemed jewellery pawned before 16-3-1978 with Mr. Vi Visvalingam of 5, Main Street, Kayts on Wednesday 28-3-1979 commencing at 9 a.m. at the said pawn shop.

"RAJAGIRI"
643, K. K. S. Road,
JAFFNA.

V. S. Cuttipilla
Auctioneer


## தாரணிக்குத் தமிழ்தந்த தவசிரேட்டர்

அறம் உரைத்துப் பொருள் வகுத்து இன்பம் தெரித்து வீடு காட்டிய சிறந்த தெய்வப் புலவரில் அன்றி வேறெவரிடத்தும் காணுதற்கரிது.

மனிதன் வாழ வேண்டும் என்ற அன்புணர்ச்சியினால் அவனுக்குப் புனித நெறியைப் புகட்டவே தவமிருந்தார்போலும் தவசிரேட்டராம் வள்ளுவனார்.

புனித வாழ்வை, திருமறை தந்த குரவர் ஒருவர் நல்ல வண்ணம் வாழ்தல் என்றனர். அந்த வண்ணத்துக்கு இலக்கணம் வகுத்தவர் தெய்வப்புலவர்.

புத்திமதியைப் பொருத்தமாகவும் கருத்தில் பொருந்தும்படியாகவும் புகட்டுவதற்குச் செய்யுளே சிறந்த வழி. அந்தப் பாவினத்திலும் வெண்பா மேன்மையானது. அதனிலும் இதமானது ஈரடி வெண்பாவென்னும் குறள்வெண்பா.

சிந்தை தெளிந்தவர்களன்றி வேறெந்த விவேகம் படைத்தவர்களும் ஒரு தனிக் கருத்தை ஒரு செய்யுளிலடக்க முடியாது. பாதி வெண்பாவில் ஒரு கருத்தை ஓதுவதென்றால் ஆதி அநாதியாகும் பரம்பொருளின் அருட்பொலிவுடையாரே அத்தகைமையுடையவராவர்.

எடுத்துக்கொண்ட கருமத்தை இனிது நிறைவுறச் செய்வதற்கு மட்டும் இறை வாழ்த்துடன் திருக்குறளைத் தொடர்கிறாரா வள்ளுவநாயனார்? இல்லை நூலாசிரியர், தாம் வணங்குதலுடன் கடவுளை ஏனையோரும் வழிபடுதல் வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே காப்புச் செய்யுட்களாகவுள்ள பத்துக் குறள் மூலங்கள் மூலம் இறைவன் உளன், அவன் [illegible] தொழுதலின் பேறென்ன? அவனடி சார்தலின் தத்துவம் யாது? அக்கதியினை யடையாதார் நிலை எவ்வாறு? என்பனவற்றைத் தெளிவுறக் கூறி இறைநெறியின் இன்றியமையாமையை இப்பதின்ந்தடிகளாலும் விளங்க வைக்கின்றனர்.

தொடக்க உரையாகவே கல்வியும் கடவுளும் என்ற கருத்தில் அரங்கமைப்பார் போல வள்ளுவனார் அகரத்தின் ஆற்றலையும் அதன் இயல்பையும் ஒருங்குணர்த்தக் கல்வியின் கொள்கையை விளங்க வைத்திருக்கின்றனர். எல்லா எழுத்துக்களிலும் வல்லோராகியவர்களே அகரத்தின் நிலையை அறிவார்கள் அங்ஙனம்.

இறையுண்மையைத் தெளிவுறுத்தி அதற்கேற்பப் போல் இறைவன் பூசையும் நிகழ்வதியல்பே என்ற கருத்தை வானம் வழங்கும் வளமாகும் மழையை அமிழ்தென்றும் தானமும் தவமும் அறத்தின்பாற் பட்டனவென்றும் இரண்டாவது சிந்தனைக் களஞ்சியமாக வள்ளுவனார் வகுத்தமைத்ததை மக்கள் ஊன்றி நோக்குவார்களாயின் வாழ்க்கைச் சித்திரத்தை முறைப்படி வரைந்து பயனடைவார்கள்.

அறத்தின் திறனை வகுக்க எழுந்த முனிபுங்கவர் அதனை எடுத்துரைக்கும் ஆற்றல் உடையவர்களைப் பெரியார் என்றும் அவர்தம் பெருமையை உலகறிதல் வேண்டும் என்றும் முனைவது உபதேசத்தைச் செய்கின்[illegible]

— — —

## Prefatory Notes and Comments

(continued from page 4)

as He wanted the Agamic Truths revealed by Himself to be propounded in Tamil by the words of Tirumoolar for the (benefit of the Tamil) world (Tirumoolar) of immense vision realized that this was the Lord's Gracious Will.

(To be continued)

Hindu Organ

Friday, March, 16-3-1979

## SAIVA RELIGIOUS SYMPOSIUM

Forums have become a permanent feature of the literary world. Discussions and dialogues in public do tend to create a taste for deeper investigations regarding matters of academic interest. However, these exchanges of view-points remain as they are without being put to use for the benefit of posterity.

The All Ceylon Saiva Maha Sabhai in a sudden flush of enthusiasm had been conducting a forum on the subject of compiling a publication in the form of what is popularly known as encyclopaedia with reference to Saiva Literature. Inspired by the holy atmosphere of the venue of these discussions - Mavai Kanthaswamy Kovil - the members of the Saiva Maha Sabhai have decided to start working on the compilation of short notes on terms that frequently occur in the context of Saiva religious ceremonies, chantings and studies with a view to publishing a Saiva Samaya Kalanchiam (சைவ சமய களஞ்சியம்)

The word encyclopaedia having a Greek derivation primarily stands for all-round education. In the course of evolution of ideas, the term now refers to a book giving information on all branches of knowledge or of one subject, usually arranged alphabetically. But by inference the word is capable of being used in a restricted sense to indicate a Saiva Samaya Kalanchiyam.

Whatever may be the literary meaning of the selected term, it is noticeable that a certain idea is meant to be conveyed.

Hence for all intents and purposes this proposition certainly has an appealing effect. The Saiva World, therefore, owes a duty to the organizers of this laudable project.

In this connection we have always been stressing on the need for expert expositions on words that denote Saiva rituals to be collected and edited by religious leaders well versed in the Vedas, Agamas, Shastras, Thirumurais and Puranas. The present effort of the Saiva Maha Sabhai may well tend to supply this demand that can satisfy the needs of not merely Saiva devotees but also those of students of Saiva Religion.

The project is as much ambitious as it is hard to be achieved. But determination and devotion to dedicated work, particularly in the sphere of religion will be able to make the scheme work smoothly and successfully It is to be hoped that all scholars learned in Saiva Literature, Sabhais and other organizations would co-operate in extending to the organizers of this praiseworthy plan assistance in every form.

*Letter to the Editor*

## A NATIONAL LOSS

One of the shining lights in Social, Cultural, Religious, in the public life of Sri Lanka has disappeared recently. The passing away of Mr. K. Alvapillai from our midst is a great loss to the country. He was an official administrator in the service of the Government, both during the British era and thereafter when our country regained its National Independence. He was in many ways excellent as a Civil Servant. Under the old system during the British days when the Judiciary and Civil Service were not separate units, he had functioned as a Judge as well. As a Civil Servant, he was universally considered one of the most efficient in the entire Administrative System. He performed duties entrusted to him with uncommon industry diligence and efficiency. As one in charge of the Food Supply of the country at a critical time, his services were acclaimed as being of a high order He worked laboriously both in and out of Sri Lanka for the State in this direction and was a successful envoy par excellence. Earlier he was the Secretary of an important Education Committee which made recommendations of a far reaching nature affecting the country and which system is still in vogue. He also served as a member of the Royal Commission on the Co-operative movement. facts and figures were at his fingers' ends His memory was prodigious. He appeared to work without a diary. In the cultural, educational and religious fields, he was connected with several of the Institutions and organisation working for the common weal. He was very ably assisted by his life's partner, Mrs. Alvapillai in his efforts so piously directed for the welfare of society and the service of Religion The Congress of Religions of Sri Lanka, the Vivekananda Society, Colombo the Tamil Sangam, the Thiruketheeswaram Temple Restoration Society, the All Ceylon Hindu Congress, the Hindu Temples Congregational Prayer Movement, the Sri Ramakrishna Mission, The Ceylon Tamil Women's Union, Ramanathan College Old Girls' Association (Colombo Branch) are among the few of the many Institutions which Mr & Mrs Alyapillai served assiduously, unremittingly, enthusiastically, and in a very devoted manner and in some of which they held the highest honorary offices Whenever any public cause which according to his mind required support he and his wife unhesitatingly and whole-heartedly did their best. He was well versed in religion and philosophy and Tamil He was a devotee of Saiva Sidhantham in a special manner, while being friendly and differential towards all religious denominations The ancient Saiva Mutt or Atheenam of Mathurei in India conferred on him the title of Siva Neri Chemmal in recognition of his invaluable service to religion.

It will be difficult to find his like in a hurry and to fill the void created by his demise.

It is sad to reflect that a healthy person like him succumbed prematurely to unexpected illness though his life was full of years, honours and service. In illness too he set an excellent example He tried to bear up his sufferings with great mental fortitude, which could only result from a deep religious background. In his affliction he expressed the definite opinion that it is part of karma in human existence to undergo suffering. physical and otherwise, and thus work out ourselves our salvation and obtain Divine Grace, according to some religions, and Nirvana according to some religions. Such was the life and philosophy of a person whom we missed badly and who did his best for the country and our holy religion. It is a great consolation that he had left behind a worthy spouse and gifted children and gifted son-in-law who will continue nobly the high traditions created by him even as we are consoled by the fact that he led a fruitful life, replete with services of varied character, intense activity and high distinction. He has disappeared from the worldly scene, but his memory will endure cherished by many and the fruits of his labours will form part and parcel of our national heritage. Such has been the life of this son of Sri Lanka and his remarkable record.

S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai

## THE SCIENCE GRADUATE'S Approach To The Study of Religion

*(Reproduced from the Elements of Saiva Siddantam and An Analysis of the Tirumantram)*

### Is it Difficult? Its Beauty

The most oft-repeated objection to the study of Tamil is that it is difficult to understand. There has been some awakening in recent years and there are young men, — a small minority though they are, —who are anxious to know some literature and our Shastras. But they labour under the handicap that they have had no graduated foundation in Tamil language and grammar to be able to read and understand them If it is found necessary to spend a period of ten or twelve years to get a tolerably decent education in English, it is idle to expect that Tamil can be mastered immediately we open a book in that language, Not that Tamil is more difficult than English, but the fault lies in our expecting the impossible. No man in his senses expects a young man who has learnt English up to the fourth or fifth standard only to be able to understand the classical English of Chaucer or Milton or the intricacies of the binomial theorem or logarithms, but that is exactly what people who speak of the difficulty of Tamil expect to find with literature in that language. If only we would devote to the study of our mother tongue a fraction of the time we spend in learning the foreign language, if we would divert a portion at least of the time we now waste in diverse ways towards the acquisition of a fair knowledge of Tamil, there would surely be no occasion to say that Tamil is difficult to understand If our English educated young men work hard and toil at it for at least a couple of years and begin to appreciate it, there would be no turning away from it, so sweet is it, so grand, so beautiful, melodious to the ear and enchanting to the mind. The more one tastes it the more he would relish it.

*(From Saiva Siddhantam)*

(To be continued)

### Notes and Comments

தண்ணிலா நீர் சடையார்தாம்
தந்த ஆகமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர்
வாக்கினால் தமிழ் வகுப்பக்
கண்ணிய அத்திருவருளால்
அவ்வுடலைக் கரப்பிக்க
எண் நிறைந்த உணர்வுடையார்
ஈசன் அருள் என உணர்ந்தார்.

The moon-decked Lord with plaited locks, graciously caused that body (of Tirumoolar) to disappear

Continued in page 3

வானமுகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 16-3-1979.*

Editor-in Chief:
R. N. Sivapirakasam